பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 06 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்புப்படையினரின் செயல்பாடு குறித்து நாடு பெருமிதம் கொள்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.
2. கஜகஸ்தான் துணை பிரதமரும், அந்நாட்டு வெளியுறவு அமைச்சருமான திரு **Murat Nurtleu** புதுதில்லியில் இன்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்தினார்.
3. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், நாட்டின் கடல்சார் துறை வியக்கத்தக்க மாற்றங்களை கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.
4. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>>**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்புப்படையினரின் செயல்பாடு குறித்து நாடு பெருமிதம் கொள்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானின் **'Chittorgarh -**ல் உள்ள சைனிக் பள்ளியில் மாணவ, மாணவியரிடையே இன்று அவர் உரையாடினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக இந்தியா தந்த பதிலடியை உலக நாடுகள் பாராட்டியுள்ளதாக அவர் கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் இ முகமது, லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்புகளின் இடங்கள் அழிக்கப்பட்டதாகவும், இதற்கு முன்னர் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதில்லை என்றும் குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டார்.

இளையோர் நலன் மற்றும் அவர்களது கல்வித்திறன் மேம்பாட்டில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

மாணவர்கள் நேர்மையான சிந்தனையுடன் திகழ வேண்டும் என்றும், தோல்வி குறித்த பயம், பதற்றம் மற்றும் அழுத்தம் இல்லாமல் செயல்பட வேண்டும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>>**

கஜகஸ்தான் துணை பிரதமரும், அந்நாட்டு வெளியுறவு அமைச்சருமான திரு **Murat Nurtleu** புதுதில்லியில் இன்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது, இந்தியா – கஜகஸ்தான் உறவை வலுப்படுத்துவதற்கான ஒத்துழைப்புத் திட்டம் கையெழுத்தானது.

அரசியல், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி ஒத்துழைப்பு உள்ளிட்டவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு அமைச்சர்களும் பேச்சு நடத்தினர்.

மத்திய ஆசிய மண்டலத்தில் உள்ள நாடுகள் இடையே பிணைப்பை மேம்படுத்துவது குறித்து டாக்டர் ஜெய்சங்கர் அவருடன் பேச்சு நடத்தினார்.

மேலும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்ததற்காக கஜகஸ்தானுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், நாட்டின் கடல்சார் துறை வியக்கத்தக்க மாற்றங்களை கண்டு வருவதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

நார்வே தலைநகர் **Oslo**–வில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், துறைமுக உட்கட்டமைப்பு விரிவாக்கம், தனியார் துறை பங்களிப்பு, சரக்கு போக்குவரத்து அமைப்பு ஒருங்கிணைப்பு உள்ளிட்டவற்றை மேம்படுத்தும் வகையில், பல்வேறு முன்னெடுப்புகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக கூறினார்.

துறைமுகங்கள் இணைப்பு மற்றும் வர்த்தக மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புக்காக 20 பில்லியன் அமெரிக்க டாலர்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டில் கப்பல் கட்டும் துறையில் முன்னணி வகிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் இடையே இந்தியாவை சேர்ந்த கடல்சார் நிறுவனங்கள் நார்வே நாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

கடல்சார் துறையில் இந்தியா – நார்வே இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமையும் என்று திரு சர்பானந்த சோனாவால் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் இடையேயான நேரடி ரயில் சேவை வரும் செப்டம்பர் மாதம் முதல் பயன்பாட்டிற்கு வரும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஜம்மு ரயில் நிலையத்தில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப்பணிகள் குறித்து அவர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

அதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜம்மு ரயில் நிலையப்பணிகள் வரும் செப்டம்பர் மாதம் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி கத்ராவில் நாளை இரண்டு வந்தே பாரத் ரயில் சேவையை தொடங்கிவைக்க உள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டுப்பணிகளை ஆய்வு செய்யும் வகையில் ரயில்வே அமைச்சரின் பயணம் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை **'Chenab** மற்றும் **'Anji** –யில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ரயில் பாலங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

மேலும், ஜம்மு காஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கிறார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் ஒரு தீவிரவாத வழக்கு தொடர்பாக, 32 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டனர்.

புல்வாமா, குல்காம், சோபியான், பாராமுல்லா, குப்வாரா மாவட்டங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

தீவிரவாத சதி தொடர்பாக, பல்வேறு தீவிரவாத அமைப்புகளை சேர்ந்த கீழ்மட்ட பணியாளர்களின் தொடர்பை கண்டறியும் வகையில், உளவுத் தகவல்கள் அடிப்படையில் இன்று அதிகாலை முதலே தேசிய புலனாய்வு முகமை இந்த சோதனையை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டை உலக அரங்கில் இந்தியா முன்வைத்திருப்பதாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு சசிதரூர் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட திரு சசிதரூர் தலைமையிலான அனைத்துக்கட்சிக் குழு, அமெரிக்காவின் வாஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவு விவகாரங்களுக்கான குழுவை சந்தித்து பேசியது.

இதனைத்தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய திரு சசிதரூர், தீவிரவாத தாக்குதல்களை எதிர்ப்பதில் இந்தியா ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

அதற்கு உலக நாடுகள் தந்துவரும் வலுவான, நிபந்தனையற்ற ஆதரவுக்கு இந்தியா நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் திரு **'Brian Mast,** தீவிரவாத தாக்குதல்களுக்கு உலகில் இடமில்லை என்று தெரிவித்தார்.

மேலும், தீவிரவாத தாக்குதலுக்கு உட்படும்போது அதற்கு பதிலளிப்பதைவிட வேறு வழி ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர், பிரஸ்ஸெல்ஸ் நகரில் ஐரோப்பிய நாடாளுமன்ற துணைத்தலைவர் திருமதி **Cristel** மற்றும் அதன் பிரதிநிதிகளை சந்தித்து பேசினர்.

பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவு நிலைப்பாட்டினால் காஷ்மீரில் வளர்ச்சிப்பணிகளில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அப்போது அவரிடம் எடுத்துரைத்ததாக திரு ரவிசங்கர் பிரசாத் தமது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, வெளிநாடுகளுக்கு சென்று திரும்பிய அனைத்துக்கட்சி குழுக்களின் தலைவர்கள் திரு சஞ்சய் குமார் ஜா, திருமதி கனிமொழி ஆகியோர். வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினர்.

அப்போது, தாங்கள் சென்று வந்த நாடுகளின் தலைவர்கள் மற்றும் அந்நாட்டு பிரதிநிதிகளிடம், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் வடகிழக்குப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் வரும் 8-ஆம் தேதிவரை இடி மின்னல் மற்றும் காற்றுடன் மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஆந்திரப்பிரதேசம், ராயலசீமா, கர்நாடகாவின் உட்பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு இடி மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

***(Voice Byte - செந்தாமரை கண்ணன் - 44 Sec.)***

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 16-21, 21-18, 22-20 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Rasmus Kjaer – Frederik Sogaard** இணையை வென்றது.

-----------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துருக்கியின் **Antalya** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 240-க்கு 236 என்ற புள்ளிக்கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

---------------

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இப்போட்டி, சீனாவின் **Hangzhou**–வில் செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் ஹாங்காங்குக்கு எதிரான போட்டியில் பங்கேற்பதற்கான 26 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**